Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (7-3-66) இதழ் 28

விசுவாவசு மாசி 24 ஜூல்கஃ பிறை 13 திங்கட்கிழமை

மினனும் வைரங்களுக்கதம்
தங்கப்பவுண் நகைகளுக்கதம்

AKS

போன் 519

நகை மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

மோசமான தாக்குதல்

சைகோன், மார்ச் 6

அமெரிக்க விமானங்கள் நேற்று வடக்கு வியட்னமில் மிகவும் மோசமான தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு வியட்னமுக்குள் 120 மைல் தூரம் உள்சென்று இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன இத்தாக்குதலில் 100-க்கும் அதிகமான விமானங்கள் கலந்துகொண்டன

4 மந்திரிகளை கொல்ல முயற்சி

பார்லிமென்டைக் கலைத்து ராணுவம் பதவியேற்றிருக்கும்

சதிக் கும்பலின் பயங்கர 7 அம்சத் திட்டம்

பொலிஸ் விசாரணையில் நாசவேலை அம்பலம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்கத்துக்கு எதிராக சதிசெய்ய முயற்சித்ததாகக்கருதப்படுபவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடவும் தேசிய அரசாங்க மந்திரிகள் சிலரையும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலரையும் கொலைசெய்துவிடவும் திட்டமிட்டிருந்ததாக இப்போது நடைபெற்றுவரும் விசாரணையிலிருந்து தெரியவந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது:

இவர்கள் 7 அம்சத் திட்டமொன்றை தயாரித்திருந்ததாகவும் படிப்படியாக இவற்றை நிறைவேற்ற நோக்கம் கொண்டிருந்தார்களென்றும் அறியவந்துள்ளது.

சென்றமாதம் 17-ந் திகதி நடைபெறவிருந்த சதித்திட்டம்பற்றி பொலிஸார் நடத்திய விசாரணையில் சதித் திட்டம் சம்பந்தமாக சந்தேகநபர்கள் தயாரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ள 7 அம்சத்திட்டம் வருமாறு:-

தேசிய அரசாங்க மந்திரிகளான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனே. திரு. பிலிப் குணவர்த்தனே டாக்டர் தகநாயக்கா மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா ஆகியோரையும் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் என். எம். பெரேரா திரு லெஸ்லி குணவர்த்தனே ஆகியோரையும் கொலைசெய்துவிடுவது.

பார்லிமென்டைக் கலைத்து சில சிவிலியன்களையும் ராணுவ அதிகாரிகளையும் கொண்ட ஒருதலைப்பட்சமான நிர்வாக மொன்றை ஏற்படுத்துவது.

சில உயர்தர இராணு அதிகாரிகளைக் கைது செய்து பாதுகாப்பில் வைப்பது, றேடியோ சிலோனைக் கைப்பற்றுவது.

லேக்ஹவுஸ், டைம்ஸ் ஆகிய இரு பத்திரிகை ஸ்தாபனங்களையும் எடுத்துக் கொள்வது அரசாங்க அச்சகத்தை எடுத்துக்கொள்வது.

ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரை விடுதலை செய்வது.

நாட்டின் நிர்வாகத்தை படிப்படியாக சதித்திட்டத்துக்குப் பக்க பலமாக இருந்து ஒத்துழைத்தவர்களிடம் ஒப்படைப்பது.

தாயகம் திரும்புவதில் நிக்ரூமா உறுதி

ஹொனலுக்கு, மார்ச் 6

தாம் தாயகம் திரும்புவது உறுதியென காலுவின் முன்னாள் ஜனாதிபதி நிக்ரூமா இன்று கினியில் தெரிவித்தார்.

காலுவின் ஒன்பதாவது சுதந்திரதினத்தை யொட்டி தமது நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியிலேயே டாக்டர் நிக்ரூமா மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தமது உரையில் கூறியதாவது:—

காலுவின் புதிய அரசாங்கத்தை மக்கள் கண்டிப்பாக நசுக்கிவிடுவார்களென்நான் நம்பிக்கைகொண்டுள்ளேன் புதிய அரசாங்கம் மிருகத்தனமாக நடந்துகொள்கிறது.'

மக்கள் ஆதரவு இன்னமும் தம்பால் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில்

3நாட்களில் 3விமானவிபத்து

டோக்கியோ, மார்ச் 6

டோக்கியோவில் இன்று அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த ஒரு விமானம் விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் நேரிடவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றும் முன்தினமும் டோக்கியோவில்விமான விபத்துக்கள் இடம் பெற்றன. இன்று நடைபெற்ற விபத்துடன் மூன்று தினங்களிலும் மூன்று விமான விபத்துக்கள் இடம்பெற்றன

தலைமைக்காரியாலயம் அறிவிப்பு

பம்பலப்பிட்டி, ஞாயிறு

நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்கு சம்பந்தமான விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி பொலிஸ் தலைமைக்காரியாலயம் சகல பொலிஸ்நிலையங்களுக்கும் அறிவித்துள்ளது.

வழக்குகளின்போது பொலிசார்ஆஜராகத தினால் பலவழக்குகள் பின்போடப்பட்டு பல மாதங்கள் தாமதம்செய்யப்பட்டுவருவதாக நீதிபதிகள் கண்டித்துள்ளனர்

விசாரணைசெய்யச் சென்ற பொலிஸார் தாக்கப்பட்டனர்?

இருவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

கைதடி என்னுமிடத்தில் விசாரணை செய்யச் சென்ற இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சட்டத்திற்கு விரோதமாகள்ளுக் கொண்டு சென்ற விவகாரத்தைப் பற்றி விசாரணை செய்ய கைதடிக்குச் சென்றிருந்த சமயம் ஒரு கும்பலொன்று ஒன்று சேர்ந்து அந்த இரு கான்ஸ்டபிள்களுடைய உத்தியோக உடுப்புகளைக் கிழித்ததுடன் அவர்களுடைய பொலிஸ் இலக்கங்களையும் பறிமுதல் செய்தனராம்.

இச்சம்பவம் பற்றி அறிந்த சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிவபாதம் தமது தலைமையில் ஒரு பொலிஸ் கோஷ்டியுடன் விரைந்துசென்று இரண்டு நபர்களை கைதுசெய்தார்.

இதுசம்பந்தமாக யாழ் பொலிஸ் உதவிஅதிகாரியும் விசாரணை நடாத்திவருகின்றார் எனத் தெரியவருகிறது.

(ந நி)

விடுமுறைத் தினமாக்க கோரிக்கை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

டி. எஸ். சேனநாயக்கா ஞாபகார்த்தச் சங்கம் மார்ச் 22-ந் திகதியை பொதுவிடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

உடுகம ராஜினமா?

கொழும்பு, ஞாயிறு

இராணுவத் தளபதி கேர்னல் ரிச்சேர்ட் உடுகம தம்மைப் பதவியிலிருந்து ஒய்வு பெற அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஜனவரி 8-ம் திகதிய சம்பவங்கள் பற்றி வெளியான அறிக்கைபற்றி வெளிவிவகார அதிகாரிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே உடுகம இவ்விதம் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

24 இடதுசாரித் தலைவர்கள்கைது

கல்கத்தாவில்அமைதிநிலவுகிறது

கல்கத்தா, மார்ச் 6

மேற்கு வங்காளத்தில் இன்று இருபத்தினான்கு இடதுசாரித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

மாணவர்களின் வன்முறை ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் கல்கத்தா இன்று அமைதியாகக் காணப்பட்டது. பஸ், ரயில் சேவைகள் இன்று வழக்கம்போல் நடைபெற்றன.

இதேபோல, நாடியா ஜில்லாவில் இன்று ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மூன்று பகுதிகளில் இப்பொழுது இந்திய இராணுவம் நிலை கொண்டிருக்கிறது.

கடந்த சில தினங்களாக மேற்கு வங்காளத்தில் நடைபெற்றுவரும் அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து இன்று காலை 24இடதுசாரித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் இப்பொழுது காவலில்வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான இவர்களில் 4 பேர் ராஜ்ய சட்டசபை உறுப்பினர்களாவர்.

இங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்தஅமைதிக்கான வழிவகைகளை மேற்கொள்ளுமுகமாக இன்றுபிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்கத்தா வந்துசேர்ந்தார். இவர் முதன் மந்திரி திரு. பி. சி. சென் மற்றும் முக்கியபிரமுகர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தைநடத்தினர்

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு

பாஷன் பேணிஷிங் பலெஸ்

அளிக்கும்

மலிவு விற்பனை

சகல விபரமும் 5-ம் பக்கத்தில் . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

பேராசை இராவி'டில் ஆயுதங்களுக்கே அவசிய மிராது சுரண்டல் ஆசை நீங்கிவிடின் ஆயுதங்கள் தாங்கமுடியாத பழுவென்பது உணரப்படும். ஒரு நாடு மற்றொன்றைச் சுரண்டுவதை நிறுத்தாவிடின் உண்மையான ஆயுத பரிகரணம் ஏற்படமுடியாது.

—மகாத்மா காந்தியடிகள்

ஈழநாடு

EELA NADU| National Tamil Daily Post Box 69, JAFFNA

Telegrams: EELA NADU Jaffna. Phone: 55

தமிழ் வருஷம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 24 உ (7-3-66)

வழக்கு விசாரணைகளும் பொலிசாரும்

வழக்குகளை விரைவில் முடித்துவைப்பதற்கு உதவியாக நீதிமன்ற அலுவல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனச் சகல பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கும், பொலிஸ் தலைமைக்காரியாலயம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. இந்த எச்சரிக்கை விரைவில் பயனளிக்கவேண்டும்.

நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துவருவதற்கு வழக்கு விசாரணைகள் அனுவசியமாக நீடிப்பதும் உடனுக்குடன் குற்றச்செயலில் ஈடுபடுவோர்களுக்குத் தண்டனை கிடைக்காம லிருப்பதும் ஒரு காரணம். வழக்கு விசாரணைகள் துரிதமாக முடிவடையாமல் தவணை போட்டு நீடிப்பதால் குற்றச்செயல்களைக் கண்ணால் கண்டவர்கள்கூட நீதிமன்றத்துக்கு அடிக்கடி சென்று வரவேண்டுமேயென்ற சலிப்பினால் வழக்குகளில் சாட்சியமளிக்க முன்வருவதில்லை.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்து அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி வழக்கை நடத்தி, அவர்களுக்குத் தண்டனைவாங்கிக் கொடுக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பகுதிப் பொலிஸ் அதிகாரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்துத் தண்டனை வாங்கிகொடுப்பதன்மூலம் அதுபோன்ற செயல்களில் மற்றையோர் ஈடுபடாமல் தடுப்பதே இதன் நோக்கமாகும். குற்றச்செயல்கள் பரவாமல் தடுப்பதுடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்புள்ள சில பொலிஸ் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் நீதிமன்ற அலுவல்களில் அதிக அக்கறை செலுத்துவதில்லை. ஒருநாளில் அல்லது ஒரு வாரத்தில் விசாரணைமுடிந்து தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய வழக்குகள்கூட பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாதக்கணக்கில் நீடித்துவிடுவதுண்டு. இதுபற்றி நீதிபதிகள்கூட பலதடவைகளிலும் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்குப் பொலிஸாருக்கும் வசதிக்குறைவுகள் இருக்கலாம். என்றாலும் வசதிக்குறைவுகளை நீக்குவதற்கு முயற்சிசெய்வதுடன் குற்றச்செயல்கள் பரவாமல் தடுப்பதற்கும் வழக்குகள் காலதாமதமின்றி முடிவடைந்து தீர்ப்புகள் விரைவில் வெளியாக வேண்டியது அவசியம் என்பதைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உணர்ந்து இவ்விஷயத்தில் ஒத்துழைப்பும் உதவியும் அளிக்கவேண்டும்.

நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் ஒழுங்காக நடைபெற உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டிய பொலிஸ் அதிகாரிகளில் மூவர் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கத் தவறியதற்காகச் சென்றவாரம் அவர்களுக்கு 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது. சட்டத்தை அமுல் நடத்தவேண்டிய பொலிஸ் அதிகாரிகளே அதன்படி நடந்துகொள்ளத் தவறியது அவர்களுக்குப் பெருமையளிக்காது.

பொலிஸ் தலைமைக்காரியாலயம்விடுத்துள்ள இந்த எச்சரிக்கை நிலைமையைச் சீர்திருத்துகென நம்புவோம். இதேசமயம் வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த முடியாமல் பொலிஸாருக்குள்ள வசதிக்குறைகளையும் பொலிஸ் தலைமைக்காரியாலயம் ஆராய்ந்து அவற்றைநிவர்த்திசெய்ய ஆவன செய்யவேண்டும்.

காரத்தைக் குறையுங்கள்?

இலங்கை மக்களின் 'காரத்தை'க் குறைக்க வர்த்தக அமைச்சும் சுகாதார அமைச்சும் கூட்டாக இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறதென ஒரு செல்தி கூறுகிறது. மிளகாய் சாப்பிடுவது உடலுக்குக் கெடுதி என்பதை சுகாதார ரீதியில் சுகாதார அமைச்சு பிரசாரம் ஆரம்பிக்குமாம். மிளகாய்க்காக வெளிநாடுகளுக்கு இங்கிருந்து பெருந்தொகையான பணம் செல்வதால் அதை மிச்சப்படுத்தும் நோக்கத்துடன் வர்த்தக அமைச்சு பிரசாரம் ஆரம்பிக்க விருக்கிறதாம்.

மிளகாய் அதிகம் உண்பதால் இரத்தத்தை வரட்டிவிடுகிறது என்பார்கள். இதனால் உடலுக்குக் கெடுதி என்பது உண்மை. ஆனால் மிளகாய் மட்டும்தானா உடலுக்குக் கெடுதி செய்கிறது. சிகரட் புகைப்பது மனிதனுக்குக் கெடுதி என்று உலக சுகாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்து உலகிலேயே பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர். சிகரட் பாக்கட்டுகளில் கூட "இது கெடுதி" என்று 'அபாய அறிவிப்பு' அமெரிக்காவில் கொடுக்கப்பட்டுள்ளதாம். இங்கும் உடலுக்குக் கெடுதியான சிகரட்டுகளை உற்பத்தி செய்வதையும் சிகரட் இறக்குமதியையும் அரசாங்கம் தடைசெய்யலாமே! 'கசிப்பு' உடலுக்குக் கெடுதி மட்டுமல்ல உயிருக்கே ஆபத்தானது என்பது தெளிவு. கசிப்பு உற்பத்தியை ஒழித்துக்கட்டிவிட்டு மிளகாய் விஷயத்தில் தலையிடுவது பொருத்தம்.

இந்தியாவிலிருந்து செத்தல் மிளகாய் இறக்குமதி செய்ததால் சென்ற இரு மாதங்களில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு ஏழரை லட்சம் ரூபாய் நஷ்டமாம். மிளகாயில் மட்டும் நஷ்டம் ஏற்பட்டதா?

புளித்தட்டுப்பாடு, உப்புத்தட்டுப்பாடுஆகியவை போதாதென்று மிளகாய்க்கும் தட்டுப்பாடு ஏற்படுத்திவிட்டால் இலங்கை மக்களுக்குச் சுவையே கெட்டுவிடும். நாவின் சுவையைக் கட்டுப்படுத்தினால் இதர ஆசைகளை அடக்கிவிடலாமென்று மகாத்மா காந்தியடிகள் சொன்னதை வைத்துக்கொண்டு உப்பு, புளி, மிளகாய் மூன்றும் உடலுக்கும் உள்ளத்துக்கும் கெடுதி விளைவிக்கும் என அரசாங்கம் பிரசாரம்செய்யலாம் ஆசையை அடக்குவதன்மூலம் குடும்பக் கட்டுப்பாட்டையும் அமுல்நடத்த வழிபிறக்குமாதலால் சுகாதார அமைச்சின்கீழுள்ள குடும்பக்கட்டுப்பாட்டு இலாகாவும் தீவிரமாக இந்தப் பிரசாரத்தில் கலந்துகொள்ளவேண்டுமாம்.

பலாத்காரம் பிரயோகிக்க திட்டம் இருந்தது

எம். பி. க்ககளின் உயிருக்கும் ஆபத்து நேர்ந்திருக்கும்

சதிபற்றியகிண்டல்களுக்கு பதில் பிரதமர் ஜே. ஆர். பதில்

இன, மத, வகுப்புக்கலவரத்துக்கு தூபம்போடும் செய்திகளைத்தான் தடைசெய்திருக்கிறோம். மற்றெந்தச் செய்திகளுக்கும் தடையில்லை. வகுப்பு வெறிக்கு வித்திடும் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டுவரவிருக்கிறோம் கிறிய கோட்டைத் தாண்டுபவர்கள்மீது சட்டமூலம்நடவடிக்கை எடுத்து தண்டனையும் கிடைக்கும். 'அத்த' (கம்யூனிஸ்ட் கட்சியின் சிங்களப் பத்திரிகை) செய்யும் விஷமப்பிரச்சாரம் நாம் அறிந்ததே. அதற்காகத்தான் தணிகையும். சதிநடந்ததென்பது உண்மை. சில அரசாங்க எம். பி. க்களுடைய உயிருக்கும், எதிர்க்கட்சியினருடைய உயிருக்கும் உலைவக்கும் நோக்கமும் இருந்தது என்று தற்காலிக பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா காரசாரமாக பதிலளித்தார்.

திரு. ஜயவர்த்தனாவின் முழுவிபரத்தையும் கீழே படிக்கவும்.

தற்காலிக பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா டாக்டர் பெரேராவுக்கும், கெனமனுக்கும் பதிலளித்துப்பேசுகையில் பின்வருமாறு கூறினர்:

அவசரகால நிலை பற்றி எதிர்க்கட்சியினர் கேட்டபோது அவர்களது கோரிக்கையை மந்திரிசபையின் பரிசீலனைக்கு சமர்ப்பித்து பின்னர் அறிக்கை வெளியிடுவதாகவும் தெரிவித்திருந்தேன். மந்திரிசபை விவாதத்துக்கான விசேஷ தினத்தைக் குறிப்பிடுமாறு நாம் அப்படிச்செய்வோம். அல்லது மந்திரி சபை அவசரகாலநிலையை இல்லாமல் செய்யவும்கூடும்.

டாக்டர் என். எம்.: வரவேற்கிறோம்.

திரு. ஜயவர்த்தனா: அவசரகாலத்தைப்பற்றி எமக்கு அக்கறையில்லை. எவ்வளவு விரைவில் அதை நீக்கமுடியுமோ அதை நான் விரும்புகிறேன்.

மூன்றாவது பிரச்னை செய்தித்தணிக்கை பற்றியது. இன, மதக்கலவரங்களைத் தூண்டும் செய்திகளைத்தவிர்த்து மற்றெந்தச் செய்திகளையாவது தணிக்கைசெய்யக்கூடாதென்பதுதான் அரசாங்கத்தின் உத்தரவு. அரசாங்கத்துக்கெதிரான கண்டனங்களையும் அனுமதிக்கவேண்டும். சாதாரணமாக ஒரு பத்திரிகை வெளியிடக்கூடிய அறிக்கைகளும் அனுமதிக்கப்படவேண்டும். சமயஇன வகுப்புக்கலகத்தை விளைவிக்கக்கூடிய செய்திகளை மாத்திரம் தணிக்கைசெய்யும்படி கட்டளையிட்டிருக்கிறேன். அதைவிட மற்றவைகளில்தணிக்கை கிடையாது. பத்திரிகைகளில் என்ன வெளிவருகின்றனவென்பதை பார்ப்பதும் கிடையாது.

டாக்டர்என். எம்.: தடைசெய்யப்பட்ட பத்திரிகைகளின் கதி என்ன? அந்தப் பத்திரிகைகளையும் வெளியிட ஏன் அனுமதிக்கக் கூடாது?

திரு. ஜெயவர்த்தனா: அதுபற்றி கேள்வி கேட்கப்படவில்லை. (பேச்சுத்தடை)

அவைகளை ஏன் வெளியிட அனுமதிக்கமுடியாதென்பதுபற்றி நாம் ஆலோசனை செய்துவருகிறோம். உங்களுடைய மிகவும் மதிப்புக்குரிய அகலலத்தைப் பிரதிநிதி (திரு. அனில்முனசிங்க) இதுசம்பந்தமாக என்னைச்சந்தித்துள்ளார். அந்தஇரண்டு பத்திரிகைகளையும் கூடியளவு விரைவில் வெளியிட அனுமதிப்பதற்கு நான் விரும்புகிறேன். ஆனால் சில சட்டங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றன. அது விரைவில் தயாராகிவிடும்.

பார்லிமெண்டில்...

சட்டம் வந்ததும் அனுமதிப்போம்

திரு. கெனமன்; தற்போது மற்றப்பத்திரிகைகளை வெளியிட அனுமதித்திருக்கும் நடைமுறையிலுள்ளசட்டங்களுக்கென்ன?

திரு. ஜயவர்த்தனா: 'அத்த' பத்திரிகை நடத்தியதுமாதிரியான பிரச்சாரங்களுக்கு எதிராக பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்காகத்தான் தற்போதைய சட்டத்தை நாம் கொண்டுவர யோசித்தோம். சட்டம் வந்தபின்னர் மற்றப் பத்திரிகைகளின் பிரசுரத்துக்கு அனுமதிப்போம். இப்படியான செய்திகளைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளுக்கு தண்டனை விதிக்கவேண்டுமா அல்லது அவைகள் தடைசெய்யப்படவேண்டுமா என்பது பற்றிய முடிவை கோர்ட் செய்வதற்கு அனுமதிக்கவேண்டும். இந்த முடிவை நாம் செய்திருப்பதற்கு காரணம் குறிப்பாக 'அத்த' பத்திரிகையின் விஷமத்தனமும், குரோதமும், இனவிரோதமுமாகும்.

திரு. கெனமன்: அது உங்களுடைய அபிப்பிராயம்.

திரு. ஜயவர்த்தனா; எங்களுடைய அபிப்பிராயத்துக்குத்தான் இன்று முக்கியத்துவம்.

திரு. கெனமன். இதிலிருந்து நான் அறிவது... (பேச்சுத்தடை).

உபசபாநாயகர்: அமைதி! அமை:!... மந்திரி தமது பேச்சை முடிக்கட்டும். தயவு செய்து குறுக்கிடவேண்டாம்.

திரு. ஜயவர்த்தனா: தணிக்கைக்குள்ளாக செல்லவேண்டுமென ஏற்கனவே கூறியிருந்தேன். தணிக்கைசெய்வதைவிட வகுப்புக்கலவரத்தையும், சமய, இனக்கலவரத்தையும் தூண்டுபவைகளைத் தவிர்ந்த இதர விஷயங்களை பிரசுரிக்க அனுமதிப்போம்.

(6-ம் பக்கம் பார்க்க)

நாட்டிலும் நகரிலும்

சென்னை பட்டினத்தில் மட்டைப்பூச்சிகளைக் கொல்வதற்கென்று கடைகளில் மூற்கப்படும் ஒருவித நச்சு விருந்து மூட்டைகளை விட மனிதர்களைத்தான் கொல்லுகிறதென்று சமீபத்தில் சென்னை சட்டசபையில் ஒரு பிரதிநிதி கூறினார். தற்கொலைசெய்துகொள்ள விரும்புகிறவர்களின் இந்த மருந்தை சுலபமாக உபயோகித்துக்கொள்ளுகிறார்களாம். தற்கொலை செய்பவர்களில் நூற்றுக்கு ஐம்பது பேர் இந்த மருந்தைத்தான் சாப்பிடுகிறார்கள் என்று இன்னும் ஓர் அங்கத்தவர் எடுத்துக்காட்டினார். இது உண்மைதானா என்று வெறொருவர் கேட்டார். சுலபமாக ஒருவருடைய உயிரை மாய்த்துக்கொள்வதற்கு அந்த மருந்து உபயோகிக்கப்பட்டால் அது அம் மருந்தின் திறமையைக் காட்டுகிறதல்லவா என்று பிரதமமந்திரி சொன்னாராம். உடனே இன்னொருவர் எழுந்து 'என்ன, அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? அது தற்கொலைசெய்பவர்களுக்கு இன்னும் தூண்டுதலளிக்குமல்லவா?' என்று ஆத்திரத்துடன் கேட்டார். 'தற்கொலைசெய்துகொள்ளுபவர்களை நாம் எப்படித் தடுக்கமுடியும்?' என்று பிரதமர் பதிலுக்கு சொன்னாராம்.

தற்கொலைசெய்ய நினைப்பவர்களை உண்மையில் தடுக்க முடியாதுதான். எத்தனை, எத்தனைவிதமாக எங்கள் நாட்டில் தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். பாருங்கள். கயிறுபோட்டுத் தூங்குகிறார்கள். துப்பாக்கியால் சுட்டுக்கொள்ளுகிறார்கள். கத்தியால் தொண்டையை அறுத்துக்கொள்ளுகிறார்கள், பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திக் கொள்ளுகிறார்கள். ரயில் தண்டவாளத்தில் படுக்கிறார்கள். கிணற்றுக்குள் விழுகிறார்கள். கடலுக்குள் குதிக்கிறார்கள், நஞ்சையும் குடிக்கிறார்கள்.

சென்னை பட்டினத்தில் மூட்டைப்பூச்சி நஞ்சு சுலபமாகக் கிடைப்பதுபோல் நமது யாழ்ப்பாணத்தில் புகையிலைக் கன்றுக்கும், கத்தரிச்செடிக்கும் மருந்தடிக்கும் கிருமிநாசினிகள் சுலபமாகக் கிடைக்கின்றது. பரீட்சையில் பாஸ் பண்ணாத பொடியன்களும், காதலில் தோல்வியுற்ற காரிகைகளும் தற்கொலைசெய்வதற்கு உபயோகிப்பது இந்தப் பூச்சி மருந்துகளையே.

இவற்றைத் தவிர உயிரைப் போக்கிக்கொள்வதற்கு இன்னும் ஒரு வழியுண்டு. இதைப் படித்தவர்கள் அநேகமாக பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்று கேள்வி. இராத்திரியில் தூக்கம் வராமல் திண்டாடுகிறவர்கள் தூக்கத்தை வருவித்துக்கொள்வதற்கு 'நித்திரை வரும் மாத்திரைகள்' சிலவற்றை விழுங்குகிறார்கள். இந்த மாத்திரைகளை சாதாரணமாக எந்த மருந்துக்கடையிலும் வாங்கிக்கொள்ளலாம். நித்திரையை வரவழைப்பதற்காக உபயோகிக்கப்படும் இந்த மாத்திரைகள் கொஞ்சம்கொஞ்சமாக நஞ்சை உடலில் சேர்த்துவிடுகின்றன. இவற்றை உபயோகிப்பவர்கள் வேண்டுமென்றேதற்கொலை செய்யவிரும்பாவிட்டாலும் சிறிது சிறிதாக தமது உயிரை மாய்த்துக்கொள்ளுகிறார்கள்.

இதெல்லாம் எழுதுவதால் தற்கொலைசெய்யப்போகிறவர்களுக்கு இன்னும் நான் புத்திமதி சொல்லிக்கொடுக்கிறேன் என்று எவரும் நினைக்கப்படாது. சென்னை பிரதமர் சொன்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டாக்டர் நிக்ரூமாவின் 'மர்ம' நடமாட்டங்கள்

கினியிலிருந்து ஏதோ ஒரு இடத்துக்குச் சென்றுள்ளார்

கானா திரும்பப்போவதாக வானொலியில் செய்தி

லண்டன், மார்ச்

கானாவின் முன்னாள் அதிபர் டாக்டர் நிக்ரூமாவின் நடமாட்டங்கள் பெரிதும் மர்மமாக இருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடைசியாகக் துடைக்கப்பெற்ற செய்திகளின்படி, டாக்டர் நிக்ரூமா தற்பொழுது கினியில் இல்லை எனத் தெரியவருகிறது.

கினி தலைநகர் கோனக்ரியிலிருந்த டாக்டர் நிக்ரூமா நேற்றிரவு ஏதோ ஒரு இடத்துக்குப் புறப்பட்டுச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர் எங்கு, யாருடன் சென்றார் என்பது பற்றி செய்திகள் எதுவும் ஊர்ஜிதம் தெரிவிக்கவில்லை.

கடைசியான ஒலிபரப்பு

நேற்றிரவு கினி வானொலி மூலம் டாக்டர் நிக்ரூமா கானா மக்களுக்குச் செய்தி யொன்று விடுத்திருந்தார்.

தாம் வெகு விரைவில் கானா மக்களுடன் சேரப் போவதாகவும் தம்மை அங்கு எதிர்பார்க்குமாறும் டாக்டர் நிக்ரூமா அச் செய்தியில் கூறியிருந்தார்.

இச் செய்தி ஒலிபரப்பப் பட்ட சில மணி நேரத்துக்குப் பின்னர் வெளியான செய்திகள், டாக்டர் நிக்ரூமா எங்கோயோ சென்றிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தின.

கானா - பிரிட்டனுக்கிடையே மீண்டும் ராஜீயத்தொடர்பு

இதற்கிடையே கானாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே மீண்டும் ராஜீயத் தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இது உடனடியாக அமுலுக்கு வருகிறது என்று பிரிட்டன் அறிவித்திருக்கிறது.

ரொடீஷியா விவகாரத்தில் பிரிட்டன் நடந்து கொள்வதைக் கண்டித்து கடந்த டிசம்பர் மாதத்தில் டாக்டர் நிக்ரூமா பிரிட்டனுடனான ராஜீயத் தொடர்புகளை முறித்திருந்தார்.

இப்பொழுது கானாவின் புரட்சி ஆட்சியை பிரிட்டன் அங்கீகரித்திருப்பதைத் தொடர்ந்து ராஜீய உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதாக கானா அறிவித்திருக்கிறது.

கானா புரட்சி ஆட்சிக்கு அமெரிக்கா உதவியளிக்கும்

கானாவின் புதிய ஆட்சியை அமெரிக்காவும் அங்கீகரித்திருக்கிறது. இந்த அங்கீகாரத்தைத் தொடர்ந்து கானா அமெரிக்காவின் உதவியைக் கோரியுள்ளது.

கானா புதிய ஆட்சியின் உதவிக் கோரிக்கை குறித்து அமெரிக்க பாதுகாப்பு இலாகா அதிகாரியொருவர் நேற்று கருத்துத் தெரிவிக்கையில்; இது சம்பந்தமாக அமெரிக்கா இப்பொழுது ஆலோசனை நடத்தி வருகிறது என்று கூறினார்.

கானாவுக்கு பொருளாதார உதவிகள் அளிப்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மொண்டேகு ஜயவிக்கிரமா லண்டன் விஜயம்

லண்டன், மார்ச் 6

பொதுமராமத்து, தபால், தந்தித் தொடர்பு மந்திரி திரு. மொண்டேகு ஜயவிக்கிரமா பிரிட்டனில் வீதியமைப்பு உபகரணங்கள், டெலிபோன், தந்தித்தொடர்பு. உபகரணங்கள் முதலானவற்றைப் பார்வையிடவும் பிரிட்டிஷ் மந்திரிகள் பலருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுமிருக்கிறார்.

இம்மாதம் 8-ந் தேதி லண்டன்வரும் மந்திரி 16-ந் தேதிவரை லண்டனில் தங்கியிருப்பார். பிரிட்டனின் மற்றநகரங்களுக்குச்சென்று விட்டு ஏப்ரல் 3-ந் தேதி அவர் லண்டனுக்குத் திரும்புவார். பின்னர் 9-ந் தேதி அவர் ஐரோப்பாவுக்குப் புறப்படுவார்.

பிரிட்டனில் வர்த்தக சபைத் தலைவர், வெளி நாட்டு அபிவிருத்தி மந்திரி, பொதுமராமத்து மந்திரி, தபால் அதிபர், தொழில் நுட்ப மந்திரி முதலானோரை திரு. ஜயவிக்கிரமா சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களை அவர் பிரிட்டிஷ் பெரிய தபால் அலுவலகத்தில் கழிப்பார். வீதியமைப்பு ஆராய்ச்சி நிலையம், கட்டட ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றிற்கும் அவர் செல்வார். ஹெண்டனில் வாகனங்கள் மிக வேகமாகச் செல்வதற்கு அமைக்கப்படும் வீதியில் வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதையும் திரு. ஜயவிக்கிரமா நேரில் சென்று பார்ப்பார்.

ரஷ்யாவுக்கு தமிழ்நாடு பசுக்கள்

சென்னை, மார்ச் 6

சென்னையிலிருந்து முதல் கட்டமாக சோவியத் யூனியனுக்கு பசு மாடுகள் ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

சோவியத் கால்நடை நிபுணர்கள் கோஷ்டி ஒன்று அண்மையில் சென்னைக்கு வந்து இதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்தது.

புதுக்கோட்டையில் அரசாங்க கால்நடைப் பண்ணையில் உள்ள இரு காளைகளையும் சோவியத்துக்கு ஏற்றுமதி செய்ய தெரிந்தெடுத்துள்ளது. ஹோசூர் கால்நடைப் பண்ணையிலிருந்து 12 கிர் பசுக்கள் சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படும்.

விமான விபத்தில் 125 பேர் மாண்டனர்

டோக்கியோ, மார்ச் 6

பிரிட்டிஷ் பிரயாணிகள் விமானமொன்று (பி. ஓ. ஏ. ஸி.) நேற்றுக் காலை டோக்கியோவுக்கு 50 மைல் தூரத்தில் பியூஜி மலையில் விழுந்து நொறுங்கியதில் 125 பேர் கொல்லப்பட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் டோக்கியோவிலிருந்து ஹாங்கொங் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

நேற்று முன்தினமிரவு டோக்கியோ சர்வதேச விமான நிலையத்தில் கனேடிய விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 64 பேர் மாண்டனர்.

450 வடவியட்னாம் துருப்புகள் மாண்டனர்

சைகோன், மார்ச் 6

கடந்த இரண்டு நாட்களாகத் தென்வியட்னாமின் மூன்று பகுதிகளில் நடைபெற்றுவரும் கடுமையான தாக்குதலின் விளைவாக 450 வடக்கு வியட்னாம் துருப்புகள் கொல்லப்பட்டனர் என்றும் சுமார் 200 வியட்காங் கொரில்லாக்கள் பலியானார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்வியட்னாமின் மத்திய பகுதியில் நடைபெற்ற சண்டையின் போது அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளின் போது அமெரிக்க, தென்வியட்னாம் துருப்புகளுக்கு அதிகமான சேதம் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் வடக்கு வியட்னாமில் அமெரிக்க விமானங்கள் நேற்றுக் கடுமையான முறையில் குண்டு வீச்சு நடத்தியிருக்கின்றன.

விமானத் தாக்குதலின் போது பாலங்கள், போக்குவரத்துச்சாலைகள் ஆகியவற்றுடன் வடக்கு வியட்னாமையும் பீகிங்கையும் இணைக்கும் ரயில் பாதையும் நாசமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மே வங்காளத்தில்

மூன்று பகுதிகளுக்கு இராணுவம் அழைக்கப்பட்டது

2 பொலிஸ் அதிகாரிகளை ஆர்ப்பாட்டக்காரர் அடித்துக் கொன்றனர்!

கல்கத்தா, மார்ச் 6

கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்ற மாணவர்களின் வன்முறைச் செயல்களைத் தொடர்ந்து, மேற்கு வங்காளத்தில், நாடியா பகுதியில் மூன்று இடங்களை இராணுவத்தினர் பொறுப்பேற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் நேற்று அமைதி நிலவியது. ஆனால் நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் காரணமாகப் பல பஸ்களும் ரயில் ஒன்றும் நாசமாக்கப்பட்டது. சில அரசாங்கக் கட்டடங்களும் பலமாகச் சேதப்படுத்தப்பட்டன.

நாடியா பகுதியில்

நாடியாபகுதியில்கிருஷ்ணநகர், சாந்திபூர் உட்பட மூன்று இடங்களை நேற்று இராணுவம் பொறுப்பேற்றது.

சாந்திபூரில் நேற்றுத் தலைகாட்டிய வன்முறைச் செயல்களின் விளைவாக இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அடித்துக்கொல்லப்பட்டதாக ஏஜன்ஸி செய்திகள் கூறுகின்றன.

பல அரசாங்கக் கட்டடங்கள் நேற்று இங்கு எரிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டங்கள் காரணமாக 97 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

காமராஜர் - இந்திரா ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 6

திரு. காமராஜர் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை சந்தித்து 45 நிமிட நேரம் வரை ஆலோசனை நடத்தினார்.

பஞ்சாபிசுபா பற்றியும், மீஸோ கலகம் பற்றியும் அவர்கள் ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

கியூபாவில் 7 பேர் கைது

காஸ்ட்ரோவைக் கொல்ல முயன்றனராம்

ஹவானா, மார்ச் 6

கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோவைக் கொலை செய்ய முயற்சித்த குற்றத்தின் பேரில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

அல்ஜீரிய மந்திரி

கராச்சி, மார்ச் 6

அல்ஜீரிய வெளிநாட்டு மந்திரி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

20 மீஸோ கலகக்காரர் பலி!

கிளர்ச்சிப் பகுதிகளுக்கு இராணுவம் விரைவு

ஷில்லாங், மார்ச் 6

அஸ்ஸாமில், மீஸோ ஜில்லாக்களில் லுங்லே எனுமிடத்தில் அஸாம் காவல் படையினருக்கும் மீஸோ கலகக்காரர்களுக்குமிடையே நேற்று முன்தினமும் நேற்றும் நிகழ்ந்த தாக்குதல்களில் இருபது மீஸோ கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

மீஸோ கலகக்காரர்கள் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி வருவதாக இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று பகல் வரை கிடைக்கப்பெற்ற கடைசிச் செய்திகளின்படி, ஏஜல், ஜஜலி தோக்கி இந்திய இராணுவத்தினர் முன்னேறிச் செல்வதாகத் தெரியவருகிறது.

அஸாம் காவல் படையினருக்கும் மீஸோ காவல்காரர்களுக்குமிடையே தொடர்ந்து 'சண்டை' நடைபெற்று வருகிறது. இரு தரப்பினரும் கணிசமான அளவில் எதிர்த்தாக்குதல்கள் நடத்தி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதற்கிடையில் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் பாதுகாப்புத் தேடி அலைந்து திரிகிறார்கள் என்றும் இவர்கள் இந்திய இராணுவ ஹெலிகாப்டர்கள் மூலம் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பர்மா எல்லையில் பதற்ற நிலைமை

பர்மா எல்லைக்கருகில் இரண்டு இடங்களில் நிலைமை பதற்றமாக இருப்பதாக அஸாம் முதன் மந்திரி சாலிஹார்நேற்றுக் கூறினார்.

மீஸோ கலகக்காரர்களினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மேலும் அரசாங்க அதிகாரிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மீஸோ மலை ஜில்லாக்களின் சில பகுதிகளில் நெடுக்கடி அதிகரித்திருந்த பொழுதிலும் சகல நடவடிக்கைகளும் இன்னும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அஸாம் முதன் மந்திரி நம்பிக்கை தெரிவித்தார்.

பிரிட்டனின் எச்சரிக்கை

லண்டன், மார்ச். 6

ரொடீஷியாவுக்கு பெற்ரோல் விநியோகம் செய்தால் தென் ஆபிரிக்காவுக்கு தாம் விநியோகித்து வரும் பெற்ரோல் விநியோகம் நிறுத்தப்படும் என பிரிட்டன் தென் ஆபிரிக்காவுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

ரொடீஷியாவில் தற்போது சிற்சில பகுதிகளில் கொரில்லாத் தாக்குதல்கள் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுதோக லேவய

பொருளாதாரத் துறையில் இளைஞர்களின் பெரும்பங்கு

யூகஸ்லாவியாவின் மொத்தக் குடிசனத்தில் 19,300,000 பேர் இளைஞர்கள். அதிலும் 3,200,000 இளைஞர்கள் பதினைந்துக்கும் இருபத்தைந்து வயதுக்கும் உட்பட்டவர்கள். இவ்விளைஞர்களின் மொத்தத் தொகையில் சரிபாதிக்கு மேலோர் உத்தியோகத்தில் உள்ளனர். இந்த விகிதாசாரத்தின்மூலம் யூகஸ்லாவியா இளம் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு நாடாக அமைந்துள்ளதால் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வித்திடுகின்றது. உண்மையில் உழவுத்தொழிலில் இயந்திரங்களின் செல்வாக்கு வளரத்தொடங்கிய பின்பு கிராமத்து மக்கள் நகரத்தை நோக்கிப் பெயரத்தொடங்கிய தாலும் கைத்தொழில் அபிவிருத்தி பொதுவாக ஏற்பட ஏதுவாக உள்ளதென்றும், குறிப்பிட்டுக் கொள்ளலாம். இந்த நிலைமை (நகரத்தை நோக்கிப் பெயருதல்) சில சமயம் பல முன்னேறும் நாடுகளின் பொருளாதாரத் திணைப் பின்நோக்கியும் செல்ல உந்திவிடுகின்றது.

அநேகமாக அநேக கிராமப்புறத்து இளைஞர்கள் நகரத்தை நோக்கிப் பெயரும் பொழுது விசேஷகல்வியறிவு ஏதுமின்றி அடிப்படைக் கல்வித் தகுதியுடன் அதுவும் சிலசமயம் முற்றுப்பெறுதனவாகவே வருகின்றார்கள். இவ்விளைஞர்கள் போதிய விசேஷ கல்வியறிவு இல்லாத காரணத்தினால் உடனடியாக வேலையில் சேரமுடிவதில்லை. சிற்சிலசமயங்களில் வேலையில் சேர்ந்து விட்டாலும் போதிய அறிவில்லாதபடியால் அவர்கள் முன்னேற முடியாமல்போய் விடுகின்றதால் அது அவர்களை மாத்திரம் பாதிக்காமல் நாட்டு உற்பத்திப் பெருக்கமும் தடைப்பட்டு விடுகின்றது.

சுய-நிர்வாகம் என்ற கோட்பாட்டில் அமைந்துள்ள யூகஸ்லாவியாவின் சமதர்ம அமைப்பில் கல்வியும் தகுதிகளும் மாத்திரம் உற்பத்திப் பெருக்கத்தினைச் சீர்படுத்தவும் வருமானத்தைப் பெருக்கவும் தடையாகவில்லை. இதை வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமாயின் பொருளாதாரத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் பாதிக்கவில்லை.

தற்பொழுது 102,000க்கு மேலான இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெறுவதில் ஈடுபட்டுள்ளனர். இப்பயிற்சியாளர்கள் நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலம்தான் வேலைசெய்கின்றார்கள். மிகுதி வேலைநேரங்களில் கைத்தொழில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்விபெறும் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். இவர்களது பயிற்சிக் காலங்களில் தகுதிகளுக்கு ஏற்றவண்ணம் ஊதியம் கொடுக்கப்படுகின்றது.

வேலைகளில் ஏற்கனவே சேர்ந்துள்ளவர்கள் சர்வகலாசாலையிலும் ஏனைய தொழிற் கல்விக்கூடங்களிலும் சேர்ந்து கல்விபெற வாய்ப்பு அளிக்கப்பட்டுவருகின்றது. இன்று சர்வகலாசாலைகளிலும் ஏனைய கல்விக் கூடங்களிலும் படிப்பவர்களின் மொத்த எண்ணிக்கையில் நாலில்மூன்று பங்கினர் இன்று தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களே. கிராமப்புறத்து இளைஞர்களில் பெரும்பகுதியினர் சுயேச்சையாக ஸ்தாபிதமாகியுள்ள இளைஞர் இயக்கங்களினூல் தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியன பெறுகின்றனர். ஆனால் எழுபத்தைந்துவீத கிராமப்புறத்து இளைஞர்கள் கைத்தொழில், விவசாயம் ஆகியவற்றில் பயிற்சிபெற்றுக் கொள்கின்றனர்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Andre Morrel
in
Shadow of the Cat
(Suspense - Thriller)

ராஜா
(வாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
புனர் ஜென்மம்

தினசரி 4-15க்கு மட்டும்
த சிமேல்வேள்ட் ஒவ்சமிலீ
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

நியூ லிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம் ஜி. ஆர். - ஈ. வி. சரோஜா
நடித்த
என் தங்கை

"லிங்கனின் வாழ்வு இளைஞருக்கு வழிகாட்டி"

சுழிபுரம். ஞாயிறு "ஆபிரகாம் லிங்கனின் வாழ்வு எமது வாலிபர்களுக்கு வழிகாட்டியாகத் திகழவேண்டும். லிங்கன் தமதுவாழ்வில் ஓர் இலட்சியவாதியாய் இருந்து உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடித்த உத்தமனர்" என வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி சமூக இயற்கழக மாணவர் மன்றத்தால் கொண்டாடப்பட்ட ஆபிரகாம்லிங்கன் பிறந்த தினவிழா வைபத்தின்போது ஆசிரியர் எஸ். மகேசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இளமையில் மிகவும் கஷ்டப்பட்டுப் பல துன்பங்களுக்கு மத்தியில் தனதுமுன் மாதிரியான உழைப்பால் உலகமக்களின் வாழ்வுடன் கலந்துகொண்ட லிங்கனின் வாழ்வு எமது வாலிபர்கள் ஒவ்வொருவருக்கும் வரப்பிரசாதமாகும். மரம் வெட்டிச் சீவனம் செய்தும் தெருவிளக்கில் கல்விகற்றும் அரசியல்லிடயங்களில் அக்கறை செலுத்தியும் லிங்கன் தமது இளமைப்பருவத்தை செப்பனிட்டுக்கொண்டான்" என வும் அவர்குறிப்பிட்டார்.

சமாஜ விழா ஏற்பாடுகள்

சுழிபுரம், ஞாயிறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ உபவிழாக்கள் இம்மாதப் பிற்பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. இயல், இசை, விளையாட்டு ஆகிய மூன்றுபகுதியாக நடைபெறவிருக்கும் போட்டிகள் முதலில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவு தோறும் நடைபெறும்.

தாக்குதல் வழக்கில் ஒரு எதிரி விடுதலை

மூவர் மீதான தீர்ப்பு

14-ம் திகதி வரை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு சங்கானைகிழக்கைச் சேர்த்வர்களான குமாரசாமி, செல்லன் சண்முகநாதன், விநாயகர் தம்பிரசா, விநாயகர் குணராசா, வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் ஆகிய நால்வரும் அதே ஊரைச் சேர்ந்த கந்தையா சின்னத்துரை என்பரை சென்ற வருடம் மே மாதம் இருபதிதொன்பதாம் திகதி இரும்புக் கம்பியாலும், கையாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாகவும், அவரை கட்டி வைத்ததாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபான முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

கந்தையா சின்னத்துரை சாட்சியமளிக்கையில் தான் கடைக்குப்போகும் போது எதிரிகள் தன்னை கையாலும் இரும்புக் கம்பியாலும் தாக்கியதாகவும் பின்னர் கொண்டுபோய் கட்டிவைத் திருந்ததாகவும் பின்னர் பொலிசார் வந்து தன்னை அழைத்துச் சென்றதாகவும் கூறினர்.

மற்றும் பலர் சாட்சியமளித்தபின் நீதிபதி நாலாம் எதிரியை விடுதலை செய்து முதல் மூன்று எதிரிகளையும் குற்றவாளிகளாகக் கண்டார். முதல் மூன்று குற்றவாளிகளைப் பற்றியும் நன்னடத்தைப் பாதுகாப்பு அதிகாரியை அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதற்காக நீதிபதி வழக்கை இம்மாதம் பதினான்காம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும்திரு. ஆர் கண்ணுத்துரை வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா ஆஜராஞர்.

'உரும்பராய் உபதபால் நிலையத்தை தரம் உயர்த்துக'

நீர்வேலி கி. ச. தீர்மானம்

உரும்பராய், ஞாயிறு 'உரும்பராயிலுள்ள உபதபாற்கந்தோர் வசதி குறைந்த நிலையமாக இருப்பதால் அதனை ஒரு பெரிய தபாற்கந்தோராக்க வேண்டுமென்று தபால் அதிபரையும் தபால் தந்தி இலாகாமந்திரியையும் இச்சபை கேட்டுக்கொள்ளுகின்றது' என்ற தீர்மானம் நீர்வேலிக் கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் திரு. சி. கனகசுந்தரத்தினால் பிரேரிக்கப்பட்டு திரு. எஸ். பஞ்சலிங்கத்தினால் அனுவதிக்கப்பட்டது.

திரு. சி. கனகசுந்தரம் இப் பிரேரணை பற்றிப் பேசுகையில் பத்தாயிரம் மக்களைக் கொண்ட கிராமத்திற்கு இந்த உபதபாற்கந்தோரால் அதிக நன்மையில்லையென்றும், பணம் அனுப்புதலிலும் பெறுவதிலும் கஷ்டமுண்டென்றும் குறிப்பிட்டார்.

தற்பொழுது இத் தபாற் கந்தோரில் போதிய பணவசதி இல்லாதபடியால் தந்தியில் வரும் பணத்தை பொதுமக்கள் உடனடியாக பெறமுடிவதில்லையென்றும் பென்ஷன் பணம் ஏககாலத்தில் வழங்கப்படுவதில்லையென்றும் திரு. கனகசுந்தரம் மேலும் குறிப்பிட்டார்.

இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு திரு. குலசிங்கம் தலைமைவகித்தார்.

வட்டுக்கோட்டைஎம்.பி மலேஷியா செல்வார்

சுழிபுரம், ஞாயிறு வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகளி மலேஷியாவுக்குச் செல்ல விருக்கின்றனர். அங்கு நடைபெறவிருக்கும் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் விசேஷ பார்வையாளர்களாக இவர்கள் கலந்துகொள்கிறார்கள். வேறு சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இவர்களுடன் செல்வார்களெனத் தெரியவருகின்றது. அநேகமாக ஏப்ரல் மாத முதல் வாரத்தில் இவர்கள் செல்வார்கள்என அறியப்படுகின்றது.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமராவ், காஞ்சன
நடித்த
சர்வர் சுந்தரம்

பெட்டர் பார்மஸி
உங்களுக்கு வேண்டிய
மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள், காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்
வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்
KMJ
23-ம் வீதி கொழும்பு-12 போன் 7213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாணவரின் முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவியவர்'

ஓய்வுபெறும் ஆசிரியருக்கு பாராட்டு

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 35 வருடங்களாக ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு. மா. சிவசுப் பிரமணியத்துக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானத்தில் பாராட்டுவிழா ஒன்று நடத்தப்பட்டது. இவ்விழாவுக்கு மாவட்டநீதிபதி திரு. கந்தசாமி தலைமைவகித்தார்.

திரு. சிவசுப்பிரமணியம் மைதான மேடைக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

புரக்டர் எம். கே. சுப்பிரமணியம் பேசுகையில், ஆசிரியர் சிவசுப்பிரமணியத்தின் சேவை பாராட்டக்கூடியதென்றும் தன்னலமற்ற பொதுச்சேவை ஒன்றின் மூலம் இப்பகுதி மக்களின் பெருமைக்கு இலக்காகிவிட்டார் என்று கூறினார்.

வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசுகையில் சிவசுப்பிரமணியத்தின் ஆசிரியசேவை பாராட்டக்கூடியதென்று கூறினர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், பின்தங்கிய இப்பகுதி மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு திரு. சிவசுப்பிரமணியம் ஆற்றிய சேவை ஈடிணையற்றதென்றும் இப்படியானவர்களின்சேவைகளின் மூலம் கிராமமும் முன்னேறக்கூடியதாக இருக்கிறதென்றும் கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. செ. சிவகுருநாதபிள்ளை பாராட்டிப் பேசுகையில், ஆசிரியரின் சேவையை நீடிப்பதற்குத் தாம் பெருமுயற்சி மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை என்றும் இவரைப் போலச் சேவைமனப்பான்மைகொண்ட ஆசிரியர்கள் இக்கல்லூரிக்குக் கிடைப்பது கஷ்டமென்றும் கூறினர்.

முடிவில் 'கிதியின் சதி' எனும் மாணவர்களின் நாடகமும் நடைபெற்றது.

வேலணை மேற்கு மங்கையர் கழகம்

வேலணை, ஞாயிறு

வேலணை மேற்கு கிராமத்தின் முன்னேற்றத்திற்காக வேலணை மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் அண்மையில் மங்கையர் கழகமொன்று அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது.

பின்வருபவர்கள் இக்கழகத்தின் நடப்புவருடத்திற்குரிய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி ரி. கேதாரநாதன், உபதலைவி: செல்வி வி. பொன்னம்பலம். இணைக்காரியதரிசிகள்: செல்வி ரி. வைத்திலிங்கம், செல்வி வி. முத்தையா. தனாதிகாரி: செல்வி எஸ். பிரமநாயகம், உபதனாதிகாரி, செல்வி ரி. செல்லத்துரை.

நாய்களின் தொல்லை

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானைப் பகுதியில் தபால் விநியோகம் செய்யும் தபால் சேவகர் வீட்டு நாய்களின் தொல்லையால் கடிதங்களை வீடுகளில் சேர்க்க முடியாது தினமும் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வீட்டு நாய்களை கட்டாது விடுவதால் தபால் விநியோகம் செய்யும்பொழுதெல்லாம் சேவகர்களை ஒழுங்கைகளிலும் தெருக்களிலும் நாய்கள் துரத்திச் செல்கின்றதாம்.

விளையாட்டுப் பகுதி

கல்லூரிகளுக் கிடையேயான பாட்மின்டன் போட்டிகள்

சில முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்.மாவட்ட பாட்மின்டன் சங்கத்தின்ஆதரவில் ஒழுங்குசெய்யப்பட்ட கல்லூரிகளுக்கிடையேயான 2-வது பாட்மின்டன் சுற்றுப் போட்டியில், இம்முறை மொத்தம் 24 போட்டிகள் ஒழுங்கு செய்யதபட்டிருக்கின்றன. யாழ். வை. எம். ஏ. விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போட்டியில் இதுவரை 7 போட்டிகள் முடிவடைந்துவிட்டன. மேற்படி சுற்றுப் போட்டியில் சென்ற முறை சுன்னகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சாம்பியனாக வந்தது குறிப்பிடத்தக்கது. இதுவரை நடந்த போட்டிகளில் முதலாவது போட்டியில்சென். ஜோன்ஸ் 'பி' பிரிவும், சென். ஜோன்ஸ் 'சி' பிரிவும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் சென். ஜோன்ஸ் 'பி' பிரிவு 'சி' பிரிவை 5—0 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

2-வது போட்டியில் சென். ஜோன்ஸ் 'சி' பிரிவும், கொக்குவில் இந்துக்கல்லூரியும் போட்டியிட்டன. இப்போட்டி மிகவும் காரசாரமானதாகவும். விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் 'சி' பிரிவு அதிதியார் இந்துக்கல்லூரியை 3—2 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

3-வது போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும், கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியும் போட்டியிட்டன. ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டார்கள் இப்போட்டி முடிவில் யாழ். மத்திய கல்லூரி கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியை 3-2 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

4-வது போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரியின் 'பி' பிரிவுக்கும் சுன்னகம் ஸ்கந்தவரோயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது. இப்போட்டியில் ஸ்கந்தவ ரோதயா வீரர்களின் விளையாட்டு மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது இப்போட்டி முடிவில் சுன்னகம் ஸ்கந்தவ ரோதயா சென். ஜோன்ஸ் 'பி' பிரிவை 5-0 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

5-வது போட்டி சென். ஜோன்ஸ் 'பி' பிரிவுக்கும், கோப்பசய் கிறீஸ்தவக் கல்லூரிக்குமிடையே நடைபெற்றது. இப்போட்டியில் கிறீஸ்தவக் கல்லூரி வீரர்கள் அபாரமாக எதிர்க் கோஷ்டியுடன் போட்டியிட்டு 5-0 புள்ளிகளால் வெற்றியீட்டினர்.

6-வது போட்டியில் சென். ஜோன்ஸ் 'பி' பிரிவும் கொக்குவில் அத்தியாயர் இந்துக் கல்லூரியும் ஆரம்பத்திலிருந்து ரசிப்பாகப் போட்டியிட்டன. சென். ஜோன்ஸ் வீரர்கள் பாராட்டக்கூடியளவுக்குத் திறமையாகப் போட்டியிட்டனர். இப்போட்டி முடிவில் சென் ஜோன்ஸ் அத்தியார் இந்துக் கல்லூரியை 3-2 புள்ளிகளால்வெற்றியீட்டியது.

7-வது போட்டி சென். ஜோன்ஸ் 'சி' பிரிவுக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்றது இப்போட்டியில் மத்திய கல்லூரி வீரர்களின் விளையாட்டு வெகு ஜோராகவிருந்தது. இப்போட்டி முடிவில் யாழ். மத்திய கல்லூரி சென். ஜோன்ஸ் 'சி' பிரிவுக் கோஷ்டியை 5-0 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

தொடர்ந்து யாழ். வை. எம். ஏ. விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப்போட்டிகள் இம்மாத முடிவில் முடிவு பெறும். இப்போட்டிகளுக்கான இறுதிப் போட்டி சென். ஜோன்ஸ் 'ஏ' பிரிவுக்கும், சுன்னகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே இம்மாதம் 23-ந் திகதி நடைபெறவிருக்கிறது

வழக்கம்பரை கோஷ்டிக்கு வெற்றி

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை இளைஞர் விளையாட்டுக் கோஷ்டிக்கும் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. விளையாட்டுக்கோஷ்டிக்குமிடையே சிநேக பூர்வமாக நடைபெற்ற கிரிக்கட்போட்டியில் வழக்கம்பரைக் கோஷ்டியினர் அமோகவெற்றி பெற்றனர். வழக்கம்பரை விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது. பண்டத்தரிப்பு முதல்ஆட்டத்திலும் இரண்டாவது ஆட்டத்திலும் மொத்தமாக 61 ஒட்டங்களை எடுத்து. வழக்கம்பரைக் கோஷ்டியினர் முதல் ஆட்டத்தில் 68 ஒட்டங்களை எடுத்தனர். வழக்கம்பரை கோஷ்டியினர் மேலதிக 7 ஒட்டங்களாலும் இன்னிங்சாலும் வெற்றி பெற்றனர்.

சைக்கிள் திருட்டு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டி இமையாணனை சேர்ந்த எம். மார்க்கண்டு என்பவர் கே. தர்மலிங்கம் என்பவருக்குச் சொந்தமான 300 ரூபாய் பெறுமதியான ஒரு சைக்கிளைக் களவாடியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்குப் பதிவுத்துறை மாஜிஸ்டிரேட் திரு. ரெயேட் செல்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சியங்களைப் பதிவு செய்தபின மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை இம் மாதம் 11-ந் திகதி ஒத்தி வைத்துள்ளார்.

வரிவினம்பரம்

தேவை

நன்கு அனுபவமுள்ள நெசவாளர் தேவை. இரு பாலாரும் நேரில் விண்ணப்பிக்கலாம். S. R. S. நெசவு நிலையம், 212, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தேவை

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. விஞ்ஞானம் முதல் வருடம் வகுப்புக்கள், விடுதி வசதி உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறைரோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

2112

நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னதுபோல, 'நான் கெடுகிறேன், பத்தயம் பிடி' என்ற முறைப்பிரகாரம் தற்கொலை செய்துகொள்ள நினைப்பவர் எவரையும் நாம் தடுக்கமுடியாது. ஆனால் நித்திரை மாத்திரைகள், கிருமிநாசினிகள், மூட்டைப் பூச்சி மருந்துகள் என்ற பெயரில் பொதுமக்கள் இலகுவில் வாங்கக்கூடிய மருந்துவகைகளுக்கு அரசாங்கமே ஒருவித இறுக்கமான கட்டுப்பாட்டைக் கொண்டுவரலாம்.

கழுத்தில் சுருக்கை மாட்டிக்கொண்டு தற்கொலை புரிகிறவனை அரசாங்கம் தடுக்கமுடியாது. ஆனால் இப்படிப்பட்ட நஞ்சுகளை அருந்தி ஆயுளைப் போக்குகிறவர்களைத் தடுக்கலாமல்லவா?

—வழிப்போக்கன்.

கீரிமலையில்

பொது நூல்நிலையம் அமைக்க முயற்சி

மாவிட்டபுரம், ஞாயிறு

சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் கீரிமலையில் பொது நூல் நிலையமொன்றினை அமைக்க தெல்லிப்பளை பிரதேசசபை முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. விரைவில் இந்த நூல் நிலையம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

விசேஷ அபிஷேகம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் வருகிற வியாழக்கிழமை சங்கட சதுர்த்தியையொட்டி விசேஷ அபிஷேகங்களும், சந்திரோதயத்தின்போது பூசையும் நடைபெறும்.

சுவரொட்டி விளம்பரப்போட்டி

முடிவு திகதி 15-3-66

சைத்திரிகர்களுக்கு 'ஈழநாடு' அளிக்கும் வாய்ப்பு

இரத்ததான சுவரொட்டி விளம்பரப் போட்டிக்கு சைத்திரிகர்களிடமிருந்து ஏராளமான சித்திரங்கள் இதுவரை எமக்குக் கிடைத்துள்ளன. சைத்திரிகர்கள் பலர், போட்டிக்குக் கொடுக்கப்பட்ட அவகாசம் போதாது எனக் குறைப்பட்டுக் கொண்டு, போட்டி முடிவு திகதியை நீடிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். அவர்களின் வேண்டுகோளை முன்னிட்டு இப்போட்டியின் முடிவு திகதியை 15-3-66 வரை நீடித்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

○ இரத்ததானத்தின் நற்பயனை விளக்குவதாக சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும்.

○ சித்திரங்கள் மூவர்ணத்திலும், இரு வர்ணத்திலும் இருக்கலாம்.

○ 22" X 17" அளவு தாளில் சித்திரங்கள் தீட்டப்படவேண்டும்.

○ சித்திரங்கள் சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

சிறந்த சித்திரமாகத் தெரிவுசெய்யப்படும் சித்திரத்துக்கு 100 ரூபாய் பரிசு வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் இரத்ததானச் சங்கத்தின் ஆதரவில் இப்போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியில் கலந்துகொள்வோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தமது சித்திரங்களுடன் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம்.

தகுதி வாய்ந்த ஒரு குழு சிறந்த சித்திரங்களைத் தெரிவுசெய்யும். எனினும் இறுதித் தீர்ப்பு 'ஈழநாடு' ஆசிரியருக்கே உரியது.

பெயர் .....

விலாசம் .....

சித்திரத்தின் தலைப்பு .....

மலிவு விற்பனை

(9 - 3 - 66 — 20 - 4 - 66)

உங்கள் இல்லங்களை அலங்கரிப்பதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

	முன்னைய விலை	மலிவு விலை
சாதாரண கதிரை	10-00	8-50
சாப்பாட்டு மேசைக் கதிரை	14-00	13-00
டபிள் ஆம் செற்றி செற்	260-00	230-00
,, ,, ,, பிளாஸ்ரிக்	275-00	245-00
முதிரை அலுமாரி (கண்ணாடி)	300-00	250-00
முதிரை அலுமாரி (பிளேன்)	290-00	240-00
டயினிங் ரேபிள்	150-00	125-00
முதிரை மேசைகள்	65-00	55-00
கபினெற்	150-00	120-00
கபினெற்	200-00	165-00

(இன்னும் பல விசேஷ சலுகைகளும் உண்டு.)

பாஷன் பேணிஷிங் பலெஸ்

(தளபாட மாளிகை)

5-7, ஸ்ரான்லி வீதி, -- யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரம் பிரயோகிக்க ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கும்படியும் கேட்டுவ் ளேன். 'தவஸ' பத்திரிகை யில் வெளிவந்த வடையின் காரணமாகத் தான் வயிற் றுக்கோளாறு வன்ற கட்டு ரையைக்கூட -பிரதமரைக் குறிப்பிடும்- அனுமதித் தோம். நான் கருதவில்லை தணிக்கை... (பேச்சுத் தடை). இந்தக் கேள்விகளை யெல்லாம் இப்போது கேட் டால் என்னால் பதில் கூற முடியாது.

தணிக்கையில்லாத செய்திகள்

உப சபாநாயகர்: தயவு செய்து தடையின்றி மந்திரி யவர்கள் பேசுவதற்கு அனு மதியுங்கள்.

திரு. ஜயவர்த்தனே: மற் றப் பத்திரிகைகளில் வந்தி ருக்கும் அறிக்கைகள் சம்பத் தமாக எதிர்க்கட்சிகள் எழுப் பிய கேள்விகளுக்கு தாங் களே பதில்கூறிவிட்டார் கள்.

டாக்டர் என்.எம் :என்ன கேள்வி?

திரு. ஜயவர்த்தனே. சதி பற்றியது. அவசரகாலத்தை நீடிப்பதற்காக, அரசாங்கத் தினால் மேற்கொள்ளப்பட்ட வைகள் என்றே நீங்கள் கரு துகிறீர்கள் (பேச்சுத்தடை) இப்படியிருக்கையில் எதற் காக என்னை பதிலளிக்கும் படி கோருகிறீர்கள், அந்தச் செய்தி சரியானதல்லவென் று கருதுகிறீர்கள். பொய் யானதென்கிறீர்கள். பத்தி ரிகைகள் பிரசுரித்திருக்கின் றன. முழுவதையும் பிரசுரி க்க அனுமதிக்கும்படி நான் கேட்டிருந்தேன்.

திரு. கெனமன்: சதிகள் பற்றிய அறிக்கைகளை தணி க்கை செய்யவேண்டுமென நீங்கள் கருதவில்லையா?

திரு. ஜயவர்த்தனே: நான் எப்படி நிறுத்துவது? அப் படியான செய்திகளுக்கு தணிக்கையில்லையே! எந்தப் புதினமாவது தேசத்துரோக மானதாகவில்லாவிட்டால் அது பிரசுரத்துக்கு அனும திக்கப்படும். சுயேச்சை யான பத்திரிகைகள் அச் செய்திகளை பிரசுரித்திருக் கின்றன. 'சிங்களே' கூட பிர சுரித்திருக்கிறது. வகும்பு சமயப்பூசலைக் கிளறக்கூடிய செய்திகளைத்தவிர மற் றெல்லா செய்திகளையும் பிர சுரிக்க அனுமதிக்கப்பட்டி ருக்கிறது. (பேச்சுத்தடை) சதிபற்றி ஏதும் நான் கூற வேண்டுமென விரும்பினால் எனக்குத் தெரிந்தவற்றை கூறுகிறேன். (பேச்சுத் தடை).

உண்மையான தகவல்கள் உண்டு

உபசபாநாயகர்: ஒழுங்கு! அமைதி!! மந்திரி அவர்கள் தடையின்றிப் பேசட்டும்.

திரு. ஜயவர்த்தனே: நாம் சர்ச்சை செய்யவேண்டிய தில்லையென்றும், ஏதோ சிறிய பிரச்னையென்றும் நீங்கள் கருதுவீர்களானால் நான் அதுபற்றி எதையும் கூறாமல் விட்டுவிடுகிறேன். சில அர சாங்க எம். பி.க்களுக்கு எதி ராகவும், எதிர்க்கட்சியின ருக்கெதிராகவும் குறிப்பிட த்தக்க அளவு பலாத்காரம் உபயோகிக்கப்பட்டிருந்த தென்பதுபற்றி எம்மிடம் உண்மையான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆகையி னால் நாம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்துள்ளோம். எல் லாம் அங்கிருக்கிறது. இச் சபையின் எந்த கௌரவ அங்கத்தவராவது அவை களை பார்க்கவிரும்பினால் கிடைக்கும்படி செய்வதற்கு தயார். விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுள் கொண்டிருக்கின்றன ஆனால் பத்திரிகைகளுக்கு செய்தி தெரிந்துவிட்டது. யாரும் இதைத் தடைசெய்திருக்க முடியாது. அரசாங்க அங் கத்தவர் ஒருவரினால் இத் தகவல் கொடுக்கப்பட்டது மில்லை, பத்திரிகைச் செய்தி கள் அப்படியே சரியான தல்ல. ஆனால் உண்மையா னவை.

டாக்டர் என். எம்.: மேலும் ஒன்று! மலகூடத் துக்கு என்னகதி.

திரு. ஜயவர்த்தனே: மல கூடத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ நடந்துள்ளது.

டாக்டர் என், எம்.: வாக் குமூலங்களை பார்க்க நான் விரும்புகிறேன்.

(முற்றும்)

கலைநிகழ்ச்சி

காங்கேசன்துறை, ஞாயிறு "டில்லி காலநிகேதன்" வேல் ஆனந்தனின் கலைநிக ழ்ச்சியொன்று நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நிகழ் ந்தது.

சில ஜெர்மனியர்கள் உட் பட பெருந்திரளான மக்கள் இக்கலை கலைநிகழ்ச்சிகளை கண்டு களித்தனர். வேல் ஆனந்தனின் "தாண்டவச் செல்வன்" நடனமும் ஆன ந்த இராசமாணிக்கத்தின் சிவதாண்டவ நடனமும் செல்வி ஸ்ரீ கௌளி செல்வ ரெத்தினத்தின் நடன நிகழ் ச்சியும் இக்கலைநிகழ்ச்சியில் இடம்பெற்றன. "முழங்கும் முரசு" என்னும் நாடகமும் நடைபெற்றது.

மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்ததுஏன்?

உதவிமேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், திங் யாழ்ப்பாண மேயர் திரு. நாகராசா மீது நம்பிக்கையி ல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது பற்றி யாழ்ப் பாண உதவி மேயர் திரு. கே. வீ. தெய்வேந்திரம் பின் வரும் அறிக்கையை விடுத் துள்ளார்:-

"திரு. மகாதேவா மேய ராக இருந்த காலத்தில் அவருக்கெதிராகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில் லாத் தீர்மானங்களுக்குச் சார்பாக மூன்று முறைகள் கையெழுத்திட்டதுடன், மூன்றாவது முறை கையெழு த்திட்டு, ஒப்பந்தமும் எழுதி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மாநகரசபை ஆணையாளரிடம் ஒப்படை த்த பின் தனது சொந்த சுயநலத்துக்காக தனதுவாக் குறுதியை மீறி வாக்கெடுப் புத் தினத்தன்று தலைமறை வாக ஒழித்திருந்த திரு. நாகராசா மாநகரத்துக்கு நல்லவைகளைச் செய்வார் என்ற நம்பிக்கையுடனே அவரை மேயராகத் தெரிந் தெடுப்பதற்கு எனது ஆ தரவை அளித்தேன். ஆனால் அவர் மேயரானதும் ஏழை களான வரியிறுப்பாளர்களு க்கு பலவிதமான கஷ்டங் களை ஏற்படுத்தும் நடவடிக் கைகள் பலவற்றை எடுக்க ஆரம்பித்தார். அற்றில் சில வற்றை குறிப்பிட விரும்பு கிறேன்.

1. தெருக்களில் ஆடு மாடு களைப் பிடிப்பதற்காக சிறி தளவு அனுபவம் கூட இல் லாத சபைத் தொழிலாளர் களை நியமித்தார். பிடித்த வைகளைக் கட்ட இடம் இல் லாதபடியால் சபைக் காணி யிலும் கட்டுவித்தார். கவ னக்குறைவான நடவடிக் கையால் பிடிபட்ட கன்று களில் ஒன்று இறந்தது. ஒருவருடைய மாடு இன் னொருவருக்குக் கொடுக்கப் பட்டது. இத்தகைய செயல் களால் வரியிறுப்பவர்கள் பெரும் வேதனையடைந் தார்கள்.

2. கடந்த 3 மாத கால மாக எனது வட்டாரத்தைக் கண்காணிக்கும்ஓவசியர் ஒரு வர் விசாரணை எதுவுமில்லா மல் வேலையிலிருந்து நிற் பாட்டப்பட்டிருப்பதால் எனது வட்டார வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட் டிருக்கின்றன. அவருக்கு ஆதரவளிக்கும் அங்கத்தவர் ஒருவரைத் திருப்தி செய்வ தற்காகவே அவர் மீது எந்த விதமான விசாரணையும் இதுவரை நடைபெறாமல் இருக்கிறது.

3. ஏற்கனவே நிறைவேற் றப்பட்ட மாநகரசபைவரவு செலவுத் திட்டத்தில் வட் டாரங்களுக்கென ஒதுக்கப் பட்ட 50,000 ரூபாவை யும் தனது எண்ணப்படி தனக்கு வேண்டியவர்களது வட்டாரங்களுக்குச் செல விடுவதற்காக, முழு அதிகா ரத்தையும் தான் பெறுவத ற்காக 6 அங்கத்தவர்களைக் கொண்டு விசேட கூட்ட மொன்றைக் கூட்டுவதற் காக அறிவித்தலைப் பெற்று, விசேட கூட்டமொன்றைக் கூட்டியிருக்கிறார்.

4. கடந்த 25 வருட கால மாக நடைபெற்று வந்த முறைக்கு மாறாக, வீடு கட்டு வதற்கான வரை படங்கள் தகுதிவாய்ந்த, அங்கீகாரம் பெற்றவர்களைக் கொண்டே கீறப்பட வேண்டுமென்ற கட்டளையைக் கொண்டுவந் ததன் மூலம் வரியிறுப்போரு க்கு மிக்க கஷ்டத்தை ஏற் படுத்தியிருக்கிறார்.

5. மாநகரசபை மின் சாரப் பகுதியைச் சேர்ந்த ஒருவர், வரியிறுப்பாளர் ஒரு வர் வீட்டில், மின்சார மீற் றர் விடயத்தில் செய்த பிழையான செயலை, அத் தொழிலாளி தமது வட்டா ரத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் மேயர் மறைத்து, அவர்மீது எவ் வித நடவடிக்கையும்எடுக்கா மல் இருந்திருக்கிறார். ஆனால்அந்த ஏழை வரியிறுப் பாளருக்கு இன்னமும் மின் சாரம் வழங்கப்படவில்லை.

6. அவர் செய்யும் அத் தனை காரியங்கள் தலையாட் டிப் பொம்மைகளாக இருக்க மறுக்கும் அங்கத்த வர்களை வட்டாரங்களுக்கு வேலை செய்ய மாட்டேன், சபையைக் கலைத்துவிடும்படி சிபார்சு செய்வேன் என்பன போன்ற பயமுறுத்தல்கள் மூலம் அங்கத்தவர்களைத் தனது அடிமைகளாக வைத் திருக்க முயற்சிக்கின்றார்.

7. மின்சார இணைப்பு, தனது ஆதரவான அங்கத்த வர்களது சிபார்சின்படி, கொடுக்கப்படுகின்றதே யன்றி, வரியிறுப்பாளர் களின் தேவைக்கேற்பக் கொடுக்கப்படவில்லை.

8. இதுவரை காலமாக கோவில் திருவிழா காலங் களில் கோவில் வீதிகளுக்கு தண்ணீர்தெளித்தல், இல வசமின்சாரம் வழங்கல் முத லிய சேவைகளை மாநகர சபை இலவசமாகச் செய்து வந்தது. இப்பொழுது இவர் நல்லூர் கோவில் தவிர மற் றைய கோவில்கள் விடயத் தில் இந்தச் சலுகையை நிறுத்திவிட்டார்.

9. தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்வதற் காக, தனக்கு ஆதரவளிக் கும் அங்கத்தவர்களை திருப்தி செய்து, மற்றைய அங்கத்தவர்களையும் அவர் களது வட்டாரங்களையும் புறக்கணிக்கிறார்.

இவை மாத்திரமல்ல. இன்னும் எத்தனையோ குற் றச்சாட்டுக்கள் உண்டு. அவற்றைக் கூட்டத்தில் வெளியிடுவேன்.

இப்பிரேரணை, தனிப்பட்ட முறையில் மேயர்மீது கொண்ட அதிருப்தி காரண மாகக் கொண்டுவரப்பட்ட தல்ல. இவரது இருதலைப் பட்சமான நடவடிக்கைகளி னால் யாழ்ப்பாண மாநகரம் பாழ்பட்டு போய்விடக் கூடாதே என்ற ஒரேயொரு காரணத்துக்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது.

மேயர்கள்மீது இத்தகைய நம்பிக்கையில்லாப் பிரே ரணை கொண்டுவரப்படுவது நூதனமான காரியமல்ல. இவரும் இவருடைய ஆதர வாளர்களுமே இத்தகைய பிரேரணைகள் பலவற்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 36 நாட்கள் மேயராக இருந்த ஒருவர்மீதே இத் தகைய பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சர்வாதிகாரமும், சுயநல மும் அங்கத்தவர்களை அடி மைகளாக்கும் நிலையும் அகல வேண்டும் என்ற நோக்கத் துடனேயே இந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது.

மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் சித்திபெற்ற தமிழர்கள்

பெண்களும் தெரிவு செய்யப்பட்டனர்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

1965-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற மத்திய எழுது வினைஞர் பரீட்சை யில் சித்தி பெற்ற தமிழ் பரீட்சார்த்திகளின் விபரம்:-

ஆர். அரசரத்தினம் கோ ட்டை, கே. அருள்சுப்பிர மணியம் திருக்கோணமலை, எஸ். சி. அருந்தவராசா நுககொட, கே. பாலச்சந் திரன் யாழ்ப்பாணம், கே. கணேசன் பருத்தித்துறை, வி. குலசேகரம் அனலதீவு, எஸ். குணேந்திரராஜா வல் வெட்டித்துறை, செல்வி என். இந்துமதி நயினாதீவு, எஸ். ஏ. ஜெரோம் யாழ்ப் பாணம்

எஸ். ஆர். ஜெயபிரகா சம் யாழ்ப்பாணம், கே. கன கராசா பருத்தித்துறை, கே. மகேந்திரராசா சுழிபுரம், வீ. மாணிக்கராசா பருத்தித் துறை, என். ஏ. மாரிமுத்து சுழிபுரம், செல்வி. ஏ. மேரி ஜோசேப் பண்டத்தரிப்பு, எஸ். முத்துவேலு பருத்தித் துறை, எம். எஸ். நவரத் தினம் யாழ்ப்பாணம், சி. நவரத்தினராசா பருத்தித் துறை, கே. பீதாம்பரம் யாழ்ப்பாணம், எஸ். இராஜ கோபாலன் பருத்தித்துறை, ஏ. ராஜரத்தினம் யாழ்ப் பாணம், என். இராஜேந்தி ரம் கரவெட்டி. கே. இராம சந்திரன் பருத்தித்துறை, என், ரங்கநாதன் ஹட்டன், கே. இராசைய நீர்வேலி, சி சதானந்தன் இணுவில், எஸ் சற்குணம் யாழ்ப்பா ணம், எல். எஸ். செபரட் டினம் பண்டத்தரிப்பு, எஸ். சிவரத்தினம் தொண்டமா னறு, எஸ். ஆர். செல்வ லிங்கம் கரவெட்டி, கே. செல்வராசா நயினாதீவு வட க்கு, என். சிவராஜசிங்கம் நயினாதீவு வடக்கு, எம். சோமசுந்தரம் எழுதுமட்டு வாள், சி. சுப்பிரமணியம் காரைநகர், ரி. சுவாமிநாதன் பிள்ளை, என். எம். தலில் யாழ் ப்பாணம், கே. தனபாலசிங் கம் புத்தூர், வி. தனபால சிங்கம் கரவெட்டி, என். எஸ். தனராசா சங்கானை, எஸ். தருமநாயகம் பருத் தித்துறை, எஸ். தருமராசா பருத்தித்துறை, எஸ். தரும லிங்கம் உருதிராபுரம், எஸ். திருச்செல்வராசா வறணி, ஆர். தவராசா சுழிபுரம், எஸ். துரைசிங்கம் தெல் லிப்பழை, பி. வேலாயுத பிள்ளை கோட்டை, வி. வேலாயுதபிள்ளை பருத்தித் துறை, பி. வேலுப்பிள்ளை சாவகச்சேரி, ஏ. யோகமூர் த்தி பருத்தித்துறை.

கீரிமலைக் கடலில் சிரமதான வேலைகள்

மாவிட்டபுரம், ஞாயிறு "சரித்திரச்சிறப்புப்பெற்ற கீரிமலைக் கடலில் நீராட வரும் வெளியூர் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் கடற்கரையை நல்லமுறையில் வைத்திருப் பதற்கான முயற்சிகளை தெல் லிப்பளை கிராமசபை மேற் கொண்டுள்ளது, இதன் ஆரம்ப வேலைகள் இன்று காலை சிரமதானம் மூலம் ஆரம்பிக்கப்பட்டன.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், வலி-வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை, தெல்லிப்பழைகிராமசபைத் தலைவர் திரு. த. செல்வரத் தினம், கிராமாவிருத்தி வேலைகள் அதிகாரி திரு. பத்மநாதன், ஆகியோர் தலை மையில் மாவிட்டபுரம் திரு வள்ளுவர் கிராமமுன்னேற் றச் சங்கத் தொண்டர்கள் சிரமதான வேலைகளில் ஈடு பட்டனர்.

ஒவ்வொரு போயாதினத் திலும் தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குள் உள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்கள் பாடசாலை மாண வர்கள் என்போர் சிரம தான முயற்சியில் ஈடுபடுவர் என தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு த. செல்வரத்தினம் தெரிவித் துள்ளார்.

கீரிமலைக் கடலில் நீராடு பவர்களுக்கு இடையூறாக உள்ள கற்கள்யாவும் அகற் றப்படவிருக்கின்றது.

சிவசிதம்பரம் சென்னை சென்றார்

நல்லூர், திங்கள்

உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் சென் னைக்கு விமானமூலம் பிர யாணமானார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், ஆங்கில தொடர்ச் சொற் பொழிவுகள் நிகழ்த்தும் அழைப்பினை ஏற்று அங்கு சென்றுள்ள திரு சிவசிதம் பரம் இம்மாதம் நடுப்பகுதி யில் யாழ்ப்பாணம் திரும்பு வார்

சைவப்பிரகாண சங்கம் முயற்சி

நல்லூர், திங்கள்

சைவ உலகிற்கு அருந் தொண்டாற்றிவரும் சிவஸ்ரீ சோ. ஸ்ரீநிவாசக்குருக்களின் சேவை தலைமைப்பாராட்டி அவரைக் கௌரவிப்பதென அகில இலங்கைச்சிவப்பிரா மண சங்கம் முடிவுசெய்துள் ளது.

விளம்பரம்

வர்த்தகர்களே வணக்கம்!

1929-ம் ஆவது துவக்கம் கடை ஆரம்பம். உணவுச் சாமானுடன் கயிறுவகை, தேடாமுறுக்கு கயிறு, தும் புத்தடிவகை, ஈக்குத்தடி, பொதுவாக தும்பினால் செய்யப்பட்ட சாமான் களும் கடையில் விற்பனைக் குண்டு. வந்து பார்வை யிட்டு எங்களை ஆதரியுங் கள். 36 வருட அனுபவம். நல்ல ரகம், குறைந்த விலை. போன்: 420. விலா சம்: 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். மு. குமாரசாமி.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1960-ம் ஆண்டு மார்ச்மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org